கவிதைப்பேழை

இயல் இரண்டு

# அறம் என்னும் கதிர்




இளமைப்பருவம் எதனையும் எளிதில் கற்றுக்கொள்ளும் பருவமாகும். இப்பருவத்தில் கல்வியை மட்டுமல்லாது நற்பண்புகளையும் கற்றுக்கொள்ள வேண்டும். அது வாழ்வு முழுமைக்கும் பயனளிக்கும். அறநெறிகளை இளமைப்பருவத்தில் கற்றுக்கொள்வதை, உழவுத்தொழிலோடு ஒப்பிட்டுக் கூறும் பாடல் ஒன்றனை அறிவோம்.

*இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக*
*வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி*
*அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்*
*பைங்கூழ் சிறுகாலைச் செய்**

*– முனைப்பாடியார்*

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| வித்து | – விதை | களை | – வேண்டாத செடி |
| ஈன | – பெற | பைங்கூழ் | – பசுமையான பயிர் |
| நிலன் | – நிலம் | வன்சொல் | – கடுஞ்சொல் |

## பாடலின் பொருள்

இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ளவேண்டும். அதில் ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும். வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும். உண்மை பேசுதல் என்னும் எருவினை இடவேண்டும். அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும். இளம் வயதிலேயே இச்செயல்களைச் செய்ய வேண்டும்.

**எதுகை** – இன்சொல் – வன்சொல் – அன்புநீர்
**மோனை** – அன்பே – ஆர்வமே, இன்புருகு – இடுதிரியா
**முரண்** – இன்சொல் – வன்சொல்

## உருவக அணி

இனியசொல் விளைநிலமாகவும் ஈகை விதையாகவும் வன்சொல் களையாகவும் உண்மை எருவாகவும் அன்பு நீராகவும் அறம் கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, இப்பாடலில் உள்ளது உருவக அணி ஆகும்.



7th Std - Tamil_2025_Term_III_Unit 2.indd 23 23/01/2025 14:31:19